15th December 1961]

Sri T. S. RAMASWAMI: இப்படி நிலம் வழங்கும் முறையை அனுசரிக்கும்போது கன்யாகுமரி ஜில்லாவில் ஒரு மாதிரியாகவும் இதர ஜில்லாக்களில் ஒரு மாதிரியான முறையும் வழங்கப் படுகிறதே. அம்மாதிரி இல்லாமல் ஒரு மாதிரியாக வழங்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறுர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: இதில் மாத்திரம் ஒரு மாதிரியாக இல்லே. இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் வேறு மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. அதையெல்லாம் கவனித்துச் செய்யப்படும். (சிரிப்பு.)

Assignment of lands.

* 2411 *Q.*—Sri M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how many landless poor persons have been assigned poramboke land for cultivation during the year 1960–61 and 1961–62 districtwise; and

(*b*) the extent of poramboke lands available for cultivation?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) & (*b*) A statement [a] giving the number of persons and the total extent assigned in each district during the 2 years 1960 and 1961 (up to 31–7–1961) is placed on the table of the House. The figures furnished relate to all assignable lands including porambokes.

Sri M. S. SELVARAJAN: மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மெண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் 60-ம் வருஷத்திலும் 61-ம் வருஷத்திலும் கொடுக்கப்பட்ட நிலத்தின் அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது அங்கே கொடுக்கப்பட்டிருக்கும் நிலத்தின் அளவு நிலம் பெற்ற நபர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறதே, அதன் காரணம் என்ன? சாதாரணமாக நிலம் வழங்குவதில் விசேஷமான தடைகள் ஏதாவது இருக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் அறிவிக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: கனம் அங்கத்தினர் திருநெல்வேலி ஜில்லாவில் கிடைக்கக்கூடிய நிலத்தைப் பார்த்தால் அவருக்கு இது நன்ருகத் தெரியும். அங்கே கிடைக்கக்கூடிய நிலம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகையால்தான் அதற்குத் தகுந்த மாதிரி நிலம் வழங்குவதும் குறைவாக இருக்கிறது. அங்கு ஆர்ஜிதம் செய்திருப்பதைப் பார்த்தால் இது நன்ருகத் தெரியும். அங்கு 25 ஆயிரம் 20 ஆயிரம் எக்கர் தான் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் தான் அங்கு குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Sri P. G. MANICKAM: கோயம்பத்தூர் ஜில்லாவில் ஜூலை மாதத்திலிருந்து இது வரையிலும் 57,691 சொச்சம் ஏக்கர் தானே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதத்திற்கு என்று

---

a Printed as Appendix XII on page 1104 infra.

[15th December 1961

ஸ்பெஷல் தாசில்தாரைப் போட்டார்களே, அப்படிப் போட்டிருந்தும் 54,470.62 ஏக்கர் நிலம் தானே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு தரிசு நிலங்கள் அதிகமாக இருந்தும் இவ்வளவு தானு ஆர்ஜிதம் செய்ய முடிந்தது. இப்படி ஆர்ஜிதம் ஆவதற்கு தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? சரிவர நடவடிக்கை எடுக்கவில்லையா? அப்படியானுல் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் தாமதம் ஆவதற்குக் காரணம் சமீபத்தில் பரம்பிக்குளம் திட்டத்தை எடுத்து நடத்துவதால்தான். அதனுல் நில ஆர்ஜிதம் செய்வதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு போடப்பட்டது. அந்த முறையில் பரம்பிக்குளம் சம்பந்தப்பட்ட பொள்ளாச்சி, தாராபுரம், பல்லடம் போன்ற பகுதிகளில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டாம் என்று சொல்லப்பட்டது. அதனுல் அங்கேயெல்லாம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. பிறகு ஹரிஜனங்களுக்கு நிலம் ஒதுக்குவதை நிறுத்தி வைக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதின் பேரில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதன் பிறகு ஆர்ஜித வேலை நடைபெற்றது. அதனுல் தான் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. வேறு ஒரு காரணமும் இல்லை.

SRI T. IRUSAPPAN : சர்க்கார் தரிசு நிலங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும்போது அதை பத்து வருஷங்களுக்கு விற்கக் கூடாது என்று சில கண்டிஷன்களை போட்டுக் கொடுக்கிருர்கள். சிலர் அதை வாங்கிக்கொண்டு ஒரு வருஷத்திலேயே விற்று வருகிருர்கள். அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த பத்து வருஷ விதி என்பது ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலங்களுக்கு அப்படி விற்பதாக தகவல் என்னிடம் இல்லை. இப்படிப்பட்ட விஷயங்களை அரசாங்கத்திற்கு உடனடியாக தகவல் கொடுத்தால் துரிதமாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

Chief Minister's Conference, August 1961.

* 2412 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to implement the decision of the Chief Minister's Conference held in August, 1961?

THE HON. SRI C. SUBRAMANIAM : A note [a] on the steps taken or proposed to be taken for implementing the policy decisions embodied in the statement issued by the Chief Ministers' meeting held in August 1961, is placed on the table of the House.

[a] Printed as Appendix XIII on pages 1105–1111 infra.